INDIA - SRI LANKA FOUNDATION

# இந்திய இலங்கை மன்றம்

## ஊடக அறிக்கை

**********************

## திட்ட முன்மொழிவுகளுக்கான அழைப்பு

பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் கலாசார ரீதியான ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் ஊடாக இந்திய-இலங்கை உறவுகளை வலுவாக்கி, இரு நாடுகளினதும் மக்களிடையிலான புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக இந்திய இலங்கை மன்றமானது இந்திய - இலங்கை அரசாங்கங்கள் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் 1998ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

2. இந்நிலையில் இந்திய இலங்கை மன்றமானது, கலைகலாசாரம், கல்வி, விவசாயம், ஆராய்ச்சி, விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சுகாதாரம், சமூகசேவை, அபிவிருத்திக் கற்கைகள் மற்றும் சுற்றுலாத்துறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் ஏனைய கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் ஆகிய துறைகளில் திட்ட முன்மொழிவுகளை வரவேற்கிறது. மாணவர்கள், புலமையாளர்கள், கலைஞர்கள், தொழில்நிபுணர்கள் மற்றும் அரங்க கலைஞர்கள் உட்பட்ட தரப்பினருக்கான விஜயங்கள் மற்றும் பரிமாற்றங்களுக்கான முன்மொழிவுகளும் வரவேற்கப்படுகின்றன., இவற்றில் கருத்தரங்குகள் மாநாடுகள், கண்காட்சி, திரைப்பட விழா, கலாசார நிகழ்வுகள், மற்றும் பயிலமர்வுகள் போன்றவற்றில் பங்கேற்றல், இவ்வாறான விடயங்களில் இந்திய இலங்கை உறவுகள் குறித்த ஆராய்ச்சி செயற்பாடுகளின் முடிவுகளை பிரசுரித்தல், இந்திய மொழிகளிலுள்ள இலக்கிய படைப்புகளை இலங்கை மொழிகளிலும் அதேபோல இலங்கை மொழிகளில் உள்ளவற்றை இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடல், ஆகியவற்றுக்காகவும் திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும்.

3. 2026 ஆகஸ்டில் நடைபெறும் இந்திய-இலங்கை மன்ற பணிப்பாளர் சபையின் அமர்வின்போது இந்த முன்மொழிவுகள் குறித்து தீர்மானிக்கப்படவுள்ளதுடன் மேலே கூறப்பட்ட விடய தானங்களில் முன்மொழிவுகளை தனிநபராகவோ, நிறுவனங்களாகவோ அல்லது குழுக்களாகவோ சமர்ப்பிக்கமுடியும்.

4. விண்ணப்பதாரர்கள், இந்தியா-இலங்கை மன்றத்தின் இணையதளத்திலிருந்து (www.islfcolombo.com) விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தையும் முன்மொழிவுகளையும், கீழே உள்ள முகவரிக்கு 17 ஜூலை 2026க்கு முன்னதாக மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.


INDIA-SRI LANKA FOUNDATION

C/o. High Commission of India

36-38, Galle Road, Colombo 3

Phone: +94 11 2389924

E-mail: islfcolombo2@gmail.com


*********************